ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர் 443) May (2) / 2025

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. லக்ஷ்மீ தந்த்ரம் 3

2. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)..4

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 263)

90. த்விப்ரகாரம் து முத்ராணாம் ப்ரயோகம் வித்தி வாஸவ
அத்யாத்மம் ஸம்வித் ஆகாரம் பாஹ்யம் வாக் கர்ம சித்தஜம்

பொருள் – இந்த்ரனேஇந்த முத்ரைகளை இரண்டு விதங்களில் ப்ரயோகம் ! ஞானத்தை ரூபமாகக் கொண்டு உட்புறமும் .செய்யலாம், பேச்சு – செயல் – எண்ணம் ஆகியவற்றைக் கொண்டு வெளிப்புறமும் செய்யலாம்.

91. அநேந விதிநா முத்ராம் யோ பத்நாதி விதாநவித்
தேநேதம் முத்ரிதம் ஸர்வமபுந: பவஸித்தயே

பொருள் – இந்த முத்ரைகளில் கைதேர்ந்த ஒருவன், இவ்விதம் உள்ள பல முத்ரைகளை தகுந்த முறைகளில் ப்ரயோகம் செய்து, அதன் மூலம் மீண்டும் பிறவி எடுப்பதைத் தடுப்பான்.

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமானுஜாய நம:

ஶ்ரீரங்கநாயகி ஸமேத ஶ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 408)

திருவாய்மொழி ஆறாம் பத்து நான்காம் திருவாய்மொழி

குரவை ப்ரவேசம்

வ்யாக்யானம் - இத்திருவாய்மொழியில் ஆழ்வார் ஶ்ரீவால்மீகிபகவானோடொப்பர். அவனும் ராமாவதாரமல்லது போக்கியறியான்; அவனுடைய ப்ரபந்தமும் அப்படியே; இவரும் க்ருஷ்ணாவதாரமல்லதறியார்: இத்திருவாய்மொழி க்ருஷ்ண வ்ருத்தாந்தமொழிய வேறொன்றைச் சொல்லாது. “பாவோ நாந்யத்ர கச்சதி” என்று கொண்டு “பர தசையுங் கூட வேண்டேன்” என்ற திருவடியைப் போலேயாயிற்று இவரும் க்ருஷ்ணாவதார மொழிய வேறொன்று அறியாதபடி.

விளக்கம் - க்ருஷ்ணனுடைய திருக்கல்யாண குணங்களில் எப்போதும் ஈடுபட்டு உரைக்கும் ஆழ்வாருக்கும், க்ருஷ்ணனுடைய குணங்களை வெளிப்படுத்தும் இந்தத் திருவாய்மொழிக்கும் ஓர் உதாரணமாக ஶ்ரீவால்மீகி பகவானையும், ஶ்ரீஇராமாயணத்தையும் இந்தத் திருவாய்மொழியில் அருளிச் செய்கிறார். இந்தத் திருவாய்மொழியில் ஆழ்வார் ஶ்ரீவால்மீகி பகவானுடன் ஒப்பாகிறார். இராமனை அல்லாமல் வேறு யாரையும் வால்மீகி அறியமாட்டார். அவர் இயற்றிய இராமாயணமும் அப்படியே ஆகும். நம்மாழ்வாரும் க்ருஷ்ணன் அல்லாமல் வேறு யாரையும் அறிய மாட்டார்; இந்தத் திருவாய்மொழியும் க்ருஷ்ணனுடைய செயல்கள் அல்லாமல் வேறு எதனையும் கூறாது. உத்தரகாண்டம் (40-16) - பாவோ ந அந்யத்ர கச்சதி – உயர்ந்த பர நிலையும் கூடவேண்டாம் – என்பதற்கு

ஏற்ப இராமனை விடுத்து பரநிலையும் வேண்டவில்லை என்று அனுமன் உள்ள நிலை போன்று, இவர் க்ருஷ்ணனைத் தவிர வேறு எதனையும் வேண்டாதபடி இருந்தார்.

வ்யாக்யானம் – "சேணுயர் வானத்திருக்கும் தேவபிரான்" என்கிறபடியே கிட்டி நின்று அநுபவிக்கப் பெற்றிலோமென்கிற இழவு தீர, பூமியிலேயாகப் பெற்றது; "தொல்வருணல்வினையால் சொலக் கூடுங்கொல்?" என்றிறே இவர் ஆசைப்பட்டது; அதாவது நா நீர் வந்து திருநாமம் சொல்லுகையாகிறது ஸுக்ருத பலமிறே. "பிறந்தவாற்"றில் இவர்க்கு உண்டான இழவெல்லாம் தீரும்படி ஸ்ரீப்ருந்தாவந வ்ருத்தாந்தத்தைக் காட்டிக் கொடுக்கக் கண்டு, அது பூதகாலமாய்த் தோற்றுகையன்றிக்கே ஸமகாலம் போலே கிட்டி நின்றநுபவிக்கிறார்.

விளக்கம் – "மாசுறு சோதி" என்பது தொடங்கி "மின்னிடை மடவார்" முடிய உள்ள திருவாய்மொழிகளில் இவர் அனுபவித்த துயரங்கள் அனைத்தும் விலகும்விதமாக முற்றிலும் அனுபவிப்பதை "சேணுயர் வானத்திருக்கும் தேவபிரான்" என்று வ்யாக்யானத்தில் தொடங்கும் மூன்று வாக்கியங்கள் மூலம் கூறுகிறார். சேணுயர் வானத்திருக்கும் தேவபிரான் - என்பதற்கு ஏற்ப, அருகில் வந்து நின்று அனுபவிக்கும் நிலையை நாம் அடையவில்லையே என்ற இவருடைய இழப்பு விலகும்விதமாகப் பூமியில் வந்து அவதரித்தான். "தொல்வருணல்வினையால் சொலக் கூடுங்கொல்?" என்பதாக அல்லவோ இவர் விரும்பினார்? நாக்கானது நீர் சுரந்து சுரந்து நிற்கும்படியாகத் திருநாமம் கூறுதல் என்பது புண்ணியத்தின் பலன் அல்லவோ? "பிறந்தவாறு" என்ற திருவாய்மொழியில் இவருக்கு ஏற்பட்ட இழப்பு முழுவதையும் விலக்கும்படியாக ஸ்ரீப்ருந்தாவனத்தில் நிகழ்ந்த லீலைகளைக் காண்பித்துக் கொடுத்தான்; ஆனால் அவை முன்பொரு காலத்தில் நடந்தவை என்று தோன்றாமல் தனக்குச் சமமான இந்தக் காலத்தில் நடப்பதாக அருகில் நின்று அனுபவிக்கிறார்.

வ்யாக்யானம் - மின்னிடை மடவாரிலே "அல்லோம்" என்று அகன்று முடிந்து போகப் புக்க தம்மை "ஆவோம்" என்னப் பண்ணிச் சேர விட்டுக் கொண்டபடியை யநுஸந்தித்து, இப்படி வல்லார் இவனல்லதில்லை கிடீரென்று தலைக்கட்டுகிறாரா யிருக்கிறது. "சன்மம் பலபல"விலும் இப்படி யிருப்பதொரு ஹர்ஷமுண்டே; அதில் இதுக்கு வாசியென்? என்னில், அங்கு இதர வ்யாவ்ருத்தி மாத்ரத்தால் உண்டான ஜ்ஞாந லாபத்தால் வந்த ஹர்ஷம்; இங்கு, அவன் தன் குணங்களை நேரே இவரை

நெருங்கி யநுபவிப்பிக்க, ஸ்வவசரல்லாதபடி அநுபவித்து ஹ்ருஷ்டராய் வாய்விடுகிறார்.

விளக்கம் – "மின்னிடை மடவார்" என்ற திருவாய்மொழியுடன் இந்தத் திருவாய்மொழிக்கு உள்ள தொடர்பு என்ன என்பதை அடுத்து அருளிச்செய்கிறார். "மின்னிடை மடவார்" என்ற திருவாய்மொழியில் "சேரமாட்டோம்" என்று அகன்று முடிந்து போக முயன்ற நம்மை "நாம் அவனுடன் சேர்வோம்" என்று செய்து, தன்னுடன் சேர விட்டுக்கொண்ட விதத்தை எண்ணியவராக, இவ்விதம் செய்யவல்லவர்கள் இவன் அல்லாமல் வேறு யாரும் இல்லை என்று "நல்குரவு" திருவாய்மொழியை நிறைவு செய்கிறார். அதாவது "மின்னிடை மடவார்" என்ற திருவாய்மொழியுடன் இந்தத் திருவாய்மொழிக்கே நேரடியான ஸம்பந்தம் உள்ளது; நடுவில் வந்த "நல்குரவு" என்னும் திருவாய்மொழி ஒரு இடைச்சொருகல் ஆகிறது. ஆனால் "சன்மம் பல பல" என்ற திருவாய்மொழியிலும் இத்தகைய மகிழ்ச்சி உள்ளது அலல்வோ? அதற்கும், இந்தத் திருவாய்மொழிக்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால், அங்கு மற்றவற்றை விலக்கி ஏற்பட்டதால் உண்டான ஞான லாபம் காரணமாக மகிழ்ச்சி உள்ளது; இங்கு அவன் தனது குணங்களை நேரே இவரிடம் வந்து நின்று அனுபவிக்கும்படிச் செய்ய, இதன் விளைவாக இவர் "தன் வசப்பட்டவர் அல்லர்" என்னும்படியாக இருந்து, அவற்றை அனுபவித்து மகிழ்ச்சி அடைகிறார்.

6-4-1. குரவை ஆய்ச்சியரோடு கோத்ததும் குன்றம் ஒன்று ஏந்தியதும்
உரவு நீர்ப் பொய்கை நாகம் காய்ந்ததும் உட்பட மற்றும் பல
அரவில் பள்ளிப் பிரான் தன் மாய வினைகளையே அலற்றி
இரவும் நன் பகலும் தவிர்கிலன் என்ன குறை எனக்கே

பொருள் – ஆயர்குலப்பெண்களுடன் திருக்குரவையில் (குரவை என்பது முல்லை மற்றும் மருத நிலத்தில் உள்ள பெண்கள், தங்கள் கைகளைக் கோர்த்தபடி சுற்றி விளையாடும் ஆட்டம்) அனைத்து பெண்களும் தனது திருக்கரத்தைக் கோர்த்தபடி, ஒருவகையான மாலை போன்று இடையிடையே தான் வந்து கலந்து நின்று கோர்த்தும்; இந்தப் பெண்களுடன் இன்பமாக இவ்விதம் இருந்தபோது இதனை விலக்கும்விதமாக வந்த மழையைத் தடுப்பதற்காக அங்கிருந்த ஒரு மலையை எடுத்து ஏழு நாட்கள் எந்தவிதமான களைப்பும் இன்றி தாங்கி நின்றதும்; முதிர்ந்த

நீர் கொண்ட ஒரு பொய்கையில் இருந்து காளியனைத் தண்டித்து நியமித்த விதமும்; இப்படியாக உள்ள மேலும் பலவிதமான லீலைகளை, தான் கண்வளர்ந்தருளிய ஆதிசேஷன் என்ற படுக்கையை விட்டு வந்த உபகாரனாகிய க்ருஷ்ணனுடைய வியக்க வைக்கும் லீலைகளை ப்ரீதி பரவசம் அடைந்தவனாக உரைத்தபடி இருப்பதற்கு நல்ல இரவு மற்றும் பகல் பொழுதுகளை தவிர்வதில்லை. நமக்கு வேறு என்ன குறை உள்ளது?

அவதாரிகை - அஹோராத்ரம் க்ருஷ்ண குணங்களை ப்ரீதிபூர்வகமாக அநுபவிக்கப் பெற்ற எனக்கு இனி ஒரு குறையில்லை என்கிறார்.

விளக்கம் - “பகலும் இரவுமாக க்ருஷ்ணனுடைய திருக்கல்யாண குணங்களை, ப்ரீதியை முன்னிறுத்தியபடி அனுபவிக்கப் பெற்ற எனக்கு இனி எந்த ஒரு குறையும் இல்லை”, என்கிறார்.

வ்யாக்யானம் - (குரவையாய்ச்சியரோடு கோத்ததும்) பிறந்தவாறும் என்றாற்போலே தொடங்கி ஓரவதாரம் முன்னாக இழியாதே, இதிலே இழிவானென்? என்னில், “மின்னிடை மடவாரி”லுண்டான தம்முடைய ப்ரணய ரோஷத்தைப் போக்கித் தம்மைச் சேர விட்டுக் கொண்டபடி, திருக்குரவையிற் பெண்களோடே கலந்து அவர்களை அநுபவிப்பித்தாற்போலே யிருக்கையாலே, அது முன்னாகப் பேசுகிறார். தாம் அநுஸந்திக்கிலிறே ஓரடைவாக இழிவது! அவனநுபவிப்பித்தபடியே பேசுகிறா ராகையாலே; திருக்குரவையிற் பெண்களோடுண்டான கலவியையாயிற்று இவர்க்கு முதலிலே காட்டிக் கொடுத்தது. பஞ்சலக்ஷங்குடியிற் பெண்களெல்லாரோடுங் கலந்த ப்ரீதியுண்டாயிற்று, இவரொருவரோடே கலந்த ப்ரீதி. தன் செல்லாமையாலே இடைப் பெண்களுடைய மாலையிலே தன்னை அப்ரதாநனாக்கிக் கொண்டு கோத்ததும். “குரவை பிணைந்த குழகும்” என்று ஆசைப்பட்டபடியே அநுபவிக்கிறார். பெண்களுடைய மாலையிலே இடையீடாகத் தன்னைக் கோக்கிறபோது, “விஜயாதீயனொருவன் கலந்தான்” என்று தோற்றாதபடி அவர்களோடேயொரு நீராகக் கலந்தபடி. பெண்களும் பெண்களுமிறே கைகோத்து விளையாடுவார். திருக்குரவையில் இவனையொழியப் பெண்களுக்குச் செல்லாதாப்போலே காணும் “மின்னிடை மடவாரி”ல் ஆழ்வாரையொழிய இவனுக்குச் செல்லாமை விளைந்தபடி. கோக்கை - தொடுக்கை. கைகோத்துக் கொண்டாடும் கூத்திறே குரவைக் கூத்தாகிறது.

விளக்கம் – (குரவை ஆய்ச்சியரோடு கோத்ததும்) – "பிறந்தவாறும்" என்பது போன்று தொடங்கியவர் அந்த அவதாரத்தில் ஈடுப்படாமல் திருக்குரவைக்கூத்து என்ற லீலையில் ஏன் ஈடுபட்டார் என்பதற்கு விடை அருளிச்செய்கிறார். "மின்னிடை மடவார்" என்ற திருவாய்மொழியில் தனக்கு அவன் விஷயமாக ஏற்பட்டிருந்த ப்ரளய கோபத்தை நீக்கினான்; தன்னை அவனுடன் சேர்த்துக் கொண்டான்; இது எப்படி உள்ளது என்றால், திருக்குரவைக்கூத்தில் பெண்களுடன் கலந்து அவர்கள் தன்னை அனுபவிக்கப்படிச் செய்த செயல் போன்றே உள்ளதால், முதலில் திருக்குரவைக்கூத்து குறித்துப் பேசுகிறார். தான் இதனை எண்ணினால் அல்லவோ, க்ருஷ்ணனின் செயல்களை வரிசையாகக் கூற வேண்டும்; இது அவன், தன்னை அனுபவிக்கும்படிச் செய்த செயல் என்பதால், முதலில் கூறுகிறார். திருக்குரவைக்கூத்தில் ஆயர்குலத்துப் பெண்களுடன் தனக்கு ஏற்பட்ட சேர்க்கையை க்ருஷ்ணன் இவருக்கு முதலில் காண்பித்துக் கொடுத்தான். அவன் ஏன் இந்தத் திருக்குரவைக்கூத்தை முதலில் அனுபவித்தபடி உள்ளான் என்பதற்கு விடை அளிக்கிறார். ஐந்து லக்ஷம் குடிகளில் உள்ள அனைத்து பெண்களுடன் சேர்ந்தபடி இருந்த ப்ரீதியானது, க்ருஷ்ணனுக்கு இவர் ஒருவருடன் கலந்த ப்ரீதி போன்று இருந்தது. தான் பிரிந்திருக்க இயலாத காரணத்தால் ஆயர்குலப்பெண்கள் கோர்த்த மாலை போன்று திருக்குரவையில், தன்னை முக்கியம் அற்றவன் போன்று கோர்த்துக் கொண்டான். "பிறந்தவாறும்" என்ற திருவாய்மொழியில் தான் இழந்ததை இங்கு கிட்டப் பெற்றவராக, "குரவை" என்று தான் விரும்பிய விதமாக அனுபவிக்கிறார். பெண்களுடைய மாலையில் தான் ஒரு இடைச்செருகலாகத் தன்னைச் சேர்க்கும்போது, "வேறு ஒருவன் வந்து கலந்தான்" என்று கூற இயலாதபடி, அவர்களுடன் ஒரே நீராகக் கலந்தான். அதாவது பெண்களும் பெண்களும் அல்லவோ கைகளைக் கோர்த்து விளையாடுவார்கள்? திருக்குரவையில் இவன் வந்து கோர்க்காமல் அந்தப் பெண்களுக்குப் பூர்த்தியாகாமல் இருந்தது போன்று, "மின்னிடை மடவார்" என்ற திருவாய்மொழியில் ஆழ்வார் இன்றி இவனுக்கு ஏதும் பூர்த்தி ஆகவில்லை. கைகள் கோர்த்து விளையாடும் விளையாட்டு குரவைக்கூத்து ஆகிறது.

வ்யாக்யானம் - (குன்றமொன்றேந்தியதும்) ஸ்வர்க்கம் என்று கொண்டு ஒரு போக பூமியாய், அங்கே அப்ஸரஸ்ஸுக்களோடே கழகமிருந்து புண்ய பலாநுபவங்கள் பண்ணி ஸுப்ரதாநனா யிருப்பான் இந்த்ரனென்றொருவன் உண்டிறே; அவ்வநுபவத்தைப் பூமியிலே ஒரு பருவத்திற் பெண்களோடேகூட ஸ்வைரமாக

அநுபவித்திருக்கிற இருப்பைக் கண்டு, அது பொறுக்கமாட்டாமை அஸூயை வர்த்தித்து, “நமக்கிட்ட சோற்றை யுண்டான்” என்று ஒரு வ்யாஜமாகக் கல்வர்ஷத்தை வர்ஷிப்பித்தான்; அப்போது கைக்கு எட்டிற்றொரு மலையையெடுத்துத் தரித்துக் கொண்டு நின்றபடி. ஒருவன் இங்கே ஒருநாள் மூக்குப் புதைக்குங் காட்டில், “நம்முடைய போகம் பகுந்து போகப்புக்கா நின்றது” என்று அஞ்சி அவரை உவரை வரவிட்டுக் கலக்குமவனிறே. “இப்படி யநுபவிக்கிறான் ஸர்வேச்வரன்” என்று அறியானிறே; இவன் தன்னை மநுஷ்ய ஸஜாதீயனாக்கி வைத்துக் கொண்டிருக்கையாலே. அன்றைக் கல்வர்ஷத்தில் பசுக்களுக்கும் இடையர்க்கும் வந்த ஆபத்தைத் தீர்த்தாப் போலேயாகாதே, இவர்க்கும் “மின்னிடை மடவாரி”ல் வந்த ஆபத்தைத் தீர்த்தபடியும். (ஏந்தியதும்) பரார்த்த்தமாகையாலே கைக்கு ஓராபரணம் போலேயாயிற்று, அதுதான் வருத்தமற்றிருந்தபடி. பூ ஏந்தினாற் போலேயிருந்தது. ஏழு வயஸ்ஸிலே ஏழு நாள் ஒருபடிப்பட தரித்துக் கொண்டிறே நின்றது! (குன்றமொன்றேந்தியதும்) “இப்படி ஏழு வயஸ்ஸிலே ஏழு நாள் தரித்ததுக்கு என் செய்வோம் நாம்” என்று ஒருவர் நெஞ்சாறல் படாதபடி ஸகோத்ரியாய் நின்றிறே இவன் இவற்றை ரக்ஷித்தது.

விளக்கம் – (குன்றம் ஒன்று ஏந்தியதும்) - ஸ்வர்கம் என்பதான ஒரு இன்ப பூமி உள்ளது; அதில் தேவலோகப்பெண்களுடன் சேர்ந்து இருந்து, புண்ணியத்தின் பலனை அனுபவித்து, மிகுந்த இன்பமாக உள்ள இந்த்ரன் என்று ஒருவன் உள்ளான். தான் அடையும் அத்தகைய அனுபவங்களை, பூமியில் ஒரே பருவம் கொண்ட பெண்களுடன் கூடி, பரிபூர்ணமாக க்ருஷ்ணன் அனுபவித்தடி உள்ளதை இந்திரன் கண்டான். அதனைப் பொறுக்க இயலாமல் க்ருஷ்ணன் மீது பொறாமை கொண்டான். எனவே, “எனக்கு இட்ட உணவை க்ருஷ்ணன் உண்டான்” என்று ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி, கல் மழையைப் பெய்வித்தான். அப்போது க்ருஷ்ணன் தனது திருக்கரத்தில் அகப்பட்ட ஒரு மலையை எடுத்து, அதனைக் குடையாகத் தாங்கி நின்றான். இந்தரன் இந்த அளவிற்குப் பொறாமை கொண்டவனோ என்பதற்கு விடை அருளிச்செய்கிறார். இந்தப் பூமியில் யாரேனும் ஒருவன் ப்ராணாயாமம் செய்வதை நோக்கினாலும் கூட, “நம்முடைய இன்பத்தை பகிர்ந்து அளிக்க இயலாது” என்று அச்சம் கொண்டு, அப்ஸரஸ் பெண்களை அவனிடம் வரும்படிச் செய்து, அந்த மனிதனின் ச்ரத்தையைக் கலைப்பவன் அல்லவோ? ஆனால் தன்னைப் போன்ற ஜீவாத்மாக்களிடம் அல்லாமல், ஸர்வேச்வரனிடம் பொறாமை உண்டாகுமோ என்பதற்கு விடை அளிக்கிறார்; இவ்விதம் அனுபவித்தபடி உள்ள க்ருஷ்ணனை ஸர்வேச்வரன் என்று இந்த்ரன்

அறியவில்லை அல்லவோ? காரணம், க்ருஷ்ணன் தன்னை மனிதர்களுக்கு நிகராக வைத்து நின்றதால் ஆகும். முன்பு கல்மழை பொழிந்துபோது, பசுக்கள் மற்றும் இடையர்களுக்கு ஏற்பட்ட ஆபத்தை விலக்கியது போன்று, இவர்க்கும் "மின்னிடை மடவார்" என்ற திருவாய்மொழியில் உண்டான ஆபத்தைத் தீர்த்தான். (ஏந்தியதும்) – மற்றவர்களுக்கு என்று மலையைப் பிடித்தான், அது அவனுடைய திருக்கரத்திற்கு ஓர் ஆபரணம் போன்று விளங்கியது. ஒரு மலரை ஏந்தியது போன்று இருந்தது. ஏழு வயதில், ஏழு நாட்கள் ஒரே போன்று பிடித்தபடி நின்றான். (குன்றம் ஒன்று ஏந்தியதும்) - "இப்படி ஏழு வயதில் ஏழு நாட்கள் ஒரே போன்று பிடித்தபடி நின்றதற்கு நாம் என்ன பதில் உதவி செய்வோம்", என்று யாரும் எண்ண இயலாதபடி அவர்களின் ஒருவனாக நின்று அல்லவோ காப்பாற்றினான்!

வ்யாக்யானம் - (உரவு நீர்) தறை காணவொண்ணாமையாலுண்டான ஆழத்தை யுடைத்தான மிடுக்கையுடைய நீரென்னுதல்; அன்றியே, காளியன் விஷத்தாலே ஒருவர்க்கும் கிட்டவொண்ணாத வலியென்னுதல்; முதுநீராகையாலே வலியார் என்னுதல்; விஷத்தாலே பாதகமான வலியென்னுதல். உரவு - விஷமென்னுதல். (நாகங் காய்ந்ததும்) நாகத்தையோட்டியதும். பாம்படித்து மேலீட்டுக் காணும் பெண்களோடே ஜலக்ரீடை பண்ணிற்று. (உள்பட மற்றும் பல) இவை முதலான சேஷ்டிதங்களுக்கு ஓர் எண்ணில்லை. "பிறந்தவாற்றி"ல் பலஹாநியாலே சொல்ல மாட்டிற்றிலர்: இங்கு உகப்புத் தலைமண்டை யிட்டுச் சொல்லமாட்டுகிறிலர். மற்றும் இப்படி பெண்களோட்டைக் கலவிக்கு விரோதிகளான தண்ணீர்த் துரும்பறுத்தவை அநேகங்கள்.

விளக்கம் – (உரவு நீர்) - உரவு என்றால் மிடுக்கு. இதற்கு மூன்றுவிதமாகப் பொருள் கூறுகிறார். தரை காண இயலாதபடியால் மிக்க ஆழத்தைக் கொண்டதான மிடுக்குடைய நீர் என்பது முதல் பொருள்; அல்லது, காளியனுடைய விஷம் காரணமாக யாராலும் அடைய இயலாதபடி உள்ளதால் வலி மிக்க நீர் என்பது இரண்டாவது பொருள்; பழைய நீராக உள்ளதால் வலி மிக்க நீர் என்பது மூன்றாவது பொருள் ஆகும். மேலும் விஷத்தால் பாதிக்கப்பட்ட வலிமையான நீர் என்றும் கூறலாம். (உரவு) - விஷம் என்று கூறலாம். (நாகம் காய்ந்ததும்) - நாகத்தை விரட்டிய செயல். பாம்பை அழித்து அதன் பின்னர் ஏதும் அறியாதவன் போன்று ஆயர் பெண்களுடன் ஜலக்கீடை செய்தான். (உள்பட மற்றும் பல) - இவை முதலான லீலைகளுக்கு ஓர் எல்லை இல்லை. "பிறந்தவாறும்" என்ற

திருவாய்மொழியில் உள்ள நிலை போன்று இங்கு வலிமையில் குறை இல்லை; ஆயினும் அவனுடைய அனைத்து லீலைகளையும் ஒன்றாகச் சேர்த்து உரைக்காமல், "மற்றும் பல" என்று ஏன் பொதுவாகக் கூறினார்? அங்கு வலிமை குறைவு காரணமாக முழுவதையும் கூறவில்லை, இங்கு மகிழ்ச்சியானது தலைக்கு ஏறியபடியால் கூறவில்லை. இவ்விதம் ஆயர்குலப் பெண்களுடைய சேர்க்கைக்கு விரோதியாக இருந்த தண்ணீர்த்துரும்பு போன்ற பலவற்றையும் போக்கினான்.

வ்யாக்யானம் - (அரவில் பள்ளிப்பிரான்) – நாட்டார் உறக்கம் தமோகுணாபிபூதமாய் ஸ்வார்த்தமாயிருக்கும்; இவன் உறக்கம் பிறருடைய ரக்ஷணார்த்தமாயிருக்கும். "உறங்குவான் போல் யோகு செய்த பெருமா"னிறே. உறங்கினானாகில் பர ரக்ஷணத்துக்கு உடலாயிருக்கும்; உணர்ந்திருந்தானாகிலும் அப்படியே; இதென்ன உபகாரந்தான்! (அரவிற் பள்ளிப்பிரான்) கீழ் ஒரு பாம்போடுண்டான சேராமை சொல்லிற்று; இங்கு ஒரு பாம்போடுண்டான சேர்த்தி சொல்லுகிறது. அங்கு போகத்தைக் காற்கடைக் கொண்டமை சொல்லிற்று; இங்கு போக ப்ராவண்யம் சொல்லுகிறது. ப்ரதிகூலனான காளியனைப் பறக்கவோட்டினான்; அநுகூலனானவனைப் படுக்கையாகக் கொண்டான். இவன்தான் அநந்தமுகமாக அநுகூலிக்கும்; அவனும் அநந்தமுகமாக அடிமை கொள்ளும். "ஆயிரம் பைந்தலைய அனந்த"னிறே. (அரவிற் பள்ளிப்பிரான்) அவதாரங்களுக்கு அடி திருப்பாற்கடலாகையாலே அத்தைச் சொல்லுதல்; அன்றியே, "நாகணைமிசை நம்பிரான் சரணே சரண்" என்றத்தை ப்ரத்யபிஜ்ஞை பண்ணுகிறாராதல்.

விளக்கம் - (அரவில் பள்ளிப்பிரான்) - பொதுவாக உலகில் உள்ளவர்கள் உறங்குதல் என்பது தமோ குணம் காரணமாகவே இருக்கும். ஆனால் இவனுடைய உறக்கமானது மற்றவர்களைக் காப்பாற்றும் பொருட்டு சிந்திப்பதாகவே இருக்கும். திருவாய்மொழி (5-4-11) - உறங்குவான் போல் யோகு செய்த பெருமான் - என்பது காண்க. உறங்கினால் மற்றவர்களுடைய காப்பாற்றுதலுக்காக உள்ளது, விழித்திருந்தாலும் அது போன்றே நிலை உள்ளது; இவனுடைய உதவி செய்யும் விதம் என்னே! இதற்கு முன்பு ஒரு பாம்புடன் இவன் சேராமல் இருந்த தன்மை கூறப்பட்டது; இங்கு ஒரு பாம்புடன் சேர்ந்துள்ள தன்மை கூறபட்டது. அங்கு ஸர்ப்பத்தின் உடலையும் அனுபவத்தையும் ஒதுக்கியது கூறப்பட்டது; இங்கு இத்தகைய ஸர்ப்பத்தின் உடலையும் அனுபவத்தையும் ஈடுபாட்டுடன் கொள்வது கூறப்பட்டது. ஆனால் இரண்டுமே பாம்புகளாக உள்ளபோதிலும் இந்தப்

பாகுபாடு ஏன்? இதற்கு விடை அளிக்கிறார். விரோதியாக நின்ற காளியனை அங்கிருந்து விரட்டினான்; தனக்கு ஏற்றபடி உள்ள ஆதிசேஷனைத் தனது படுக்கையாகக் கொண்டான். ஆதிசேஷன் பலவிதத்திலும் அநுகூலமாக செயல்களைச் செய்வான்; இவனும் பல முகமாக அடிமை கொள்வான். பல முகமாக அடிமை கொள்வதற்கு ஆதிசேஷனுக்குப் பல முகங்கள் உள்ளனவோ என்பதற்கு ப்ரமாணம், பெரியாழ்வார் திருமொழி (4-3-10) - ஆயிரம் பைந்தலைய அனந்தன் – என்பதாகும். (அரவிற் பள்ளிப்பிரான்) - இங்கு க்ருஷ்ணாவதாரம் குறித்து உள்ளபோது, திருப்பாற்கடலில் உள்ளவன் குறித்து ஏன் கூறவேண்டும் என்பதற்கு விடை அளிக்கிறார். அனைத்து அவதாரங்களுக்கும் மூலகாரணம் திருப்பாற்கடல் என்பதால் அதனைக் கூறுகிறார். அல்லது, திருவாய்மொழி (5-10-11) - நாகணைமிசை நம்பிரான் சரணே சரண் – என்பதை இங்கு நினைக்கிறார் என்றும் கூறலாம்.

வ்யாக்யானம் - (தன் மாயவினைகளையேயலற்றி) அவனுடைய ஆச்சர்ய சேஷ்டிதங்களையே வாய்விட்டு ஸ்தோத்ரம் பண்ணி. (இரவு நன்பகலும் தவிர்கிலம்) பகவதநுபவத்துக்கு உறுப்பாகாதவன்றிறே "சுடர்கொள்" இராப்பகலாயிருப்பது; அநுபவ யோக்யமான காலமாகையாலே நல்ல இரவும் நல்ல பகலுமென்கிறார். விச்லேஷித்தபோதிறே நெருப்பையுருக்கி எறட்டினப் போலேயிருப்பது. (என்ன குறைவு எனக்கே) "ந கால: தத்ர வை ப்ரபு:" என்று கொண்டு பகலும் இரவும் நடையாடாததொரு தேச விசேஷந் தேடி அநுபவிக்கைக்குப் பட்டைப் பொதிசோறு கட்ட வேண்டும்படி குறைவாளனாயிருந்தேனோ? ஏகாகாரமான அநுபவமிறே அங்குள்ளது; "விஜஹார பஹூந் ருதூந்" என்கிறபடியே, அவ்வோ காலங்கள்தோறுமுண்டான அநுபவ விசேஷங்களை புஜிக்கப் பெற்ற எனக்கு ஒரு குறையுண்டோ? பரத்வாநுபவமிறே யங்குள்ளது; சீல குணாநுபவமுள்ளது இங்கேயிறே.

விளக்கம் – (தன் மாயவினைகளையே அலற்றி) - அவனுடைய வியக்கவைக்கும் லீலைகலையே வாய்விட்டுத் துதித்து. (இரவு நன்பகலும் தவிர்கிலம்) - இரவு பகல் மூலம் ஏற்படும் நன்மை என்ன என்பதை அடுத்து கூறுகிறர். பகவத் அனுபத்திற்கு உதவாமல் உள்ளன என்றால் அல்லவோ திருவாய்மொழி (2-1-4) – சுடர்கொள் - என்பதாக உள்ளது. ஆனால் இங்கு பகவத் அனுபவத்திற்கு ஏற்றபடி உள்ளதால், "நல்ல இரவும், நல்ல பகலும்" என்று கூறுகிறார். அவனுடைய பிரிவு ஏற்படும்போது அல்லவோ இவை நெருப்பை உருக்கி ஊற்றியது போன்று

உள்ளன? (என்ன குறைவு எனக்கே) – ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் - ந கால: தத்ர வை ப்ரபு: – அங்கு காலம் என்பது இல்லை - என்பதாக, பகலும் இரவும் இல்லாதபடி உள்ள இடத்தைத் தேடி, அங்கு சென்று அனுபவிப்பதற்கு ஏற்றபடி, பாக்கு மட்டையில் கட்டப்பட்ட சோற்றை எடுத்துச் செல்லவேண்டும்படி குறை உள்ளவனாக நான் இருந்தேனோ? ஒரே தன்மையான அனுபவம் மட்டுமே பரமபதத்தில் உள்ளது. பாலகாண்டம் (77-25) - விஜஹார பஹூந் ருதூந் – பல ருதுக்களில் விளையாடியபடி இருந்தான் - என்பதற்கு ஏற்ப அந்தந்த காலத்திற்கு ஏற்ப உண்டாகும் சிறந்த அனுபவங்களை அனுபவிக்கப் பெற்ற எனக்கு ஒரு குறையும் உள்ளதோ? பரத்வம் என்ற அனுபவம் மட்டுமே அங்கு உள்ளது, சீல குணத்தின் அனுபவம் இங்கு மட்டுமே உள்ளது. ஆகவே என்ன குறை?

6-4-2. கேயத் தீம்குழல் ஊதிற்றும் நிரை மேய்த்ததும் கெண்டை ஒண்கண்
வாசப் பூங்குழல் பின்னை தோள்கள் மணந்ததும் மற்றும் பல
மாயக் கோலப் பிரான் தன் செய்கை நினைந்து மனம் குழைந்து
நேயத்தோடு கழிந்த போது எனக்கு எவ் உலகம் நிகரே

பொருள் - ஆயர்குலத்துப் பெண்களுடைய உள்ளத்தை வசீகரம் செய்வதற்காக தாழ்ச்சி வெளிப்படும்படியான இனிய பாட்டுகளை, அவை மேலும் இனிமையாகும் விதமாக புல்லாங்குழல் ஊதியதும்; அந்த தாதம் மூலமாக ஆயர்குலப்பெண்கள் வருவது போன்று பசுக்களும் வரும்படியாகக் குழலை ஊதி பசுக்களை மேய்த்ததும்; கெண்டை மீன் போன்ற கண்களையும், நறுமணம் வீசும் மலர்களை சூடிய கூந்தலையும் கொண்ட நப்பின்னைபிராட்டியின் திருத்தோள்களைச் சேர்ந்ததும்; இது போன்று பலவிதமான வியக்கவைக்கும் செயல்கள் கொண்டவனும், மாயத்தோற்றங்கள் உடையவனும் ஆகிய க்ருஷ்ணனுடைய எப்போதும் அனுபவிக்கவல்ல லீலைகளை எண்ணி, எனது உள்ளம் நெகிழ்ந்து, அவன் மீது மிகுந்த அன்புடன் கூடியதாக எனது பொழுதுகள் கழிகின்றன. இப்படிப்பட்ட எனக்கு வேறு எந்த உலகம் ஒப்பாகும்?

அவதாரிகை – "தொல்லருணல் வினையால் சொலக்கூடுங்கொல்" என்று ப்ரார்த்தித்தபடியே பெறுகையாலே திருநாட்டிலேதான் என்னோடொப்பாருண்டோ? என்கிறார்.

விளக்கம் – முன்பு “தொல்லருணல் வினையால் சொலக்கூடுங்கொல்" என்று ப்ரார்த்தித்தபடியே பெறுவதால் திருநாட்டில் கூட எனக்கு ஒப்பானவர்கள் யாரும் உள்ளனரா என்கிறார்.

வ்யாக்யானம் - (கேயத்தீங்குழலூதிற்றும்) கேயமென்று பாட்டு; தீயென்று இனிமை; இனிமையையுடைய பாட்டென்றபடி, தான் நினைத்த பெண்களுடைய பேரை வைத்துப் புணர்த்துச் சுவைப் பாட்டாக வைத்து ஊதிற்றும். (நிரை மேய்த்ததும்) பெண்களை யழைக்கைக்கும் பசு மேய்க்கைக்கும் ஒன்றே பரிகரம்; குழலையூதவே பசுக்கள் வயிறு நிறையும். சக்ரவர்த்தித்திருமகனுக்கு வில்லு கைவந்திருக்குமா போலேயாயிற்று, க்ருஷ்ணனுக்குக் குழல் கைவந்திருக்கும்படி.

விளக்கம் – (கேயத் தீங்குழல் ஊதிற்றும்) - கேயம் என்றால் பாட்டு, கானம். தீம் என்றால் இனிமை. ஆக இனிமையைக் கொண்ட பாட்டு என்று கருத்து. தான் எண்ணிய பெண்களுடைய பெயரைப் பசுக்களுக்கு வைத்துக் கூறி, மனதில் மகிழ்ச்சி கொண்டு, சுவை அளிக்கவல்ல பாட்டாக ஊதினான். (நிரை மேய்த்ததும்) - பெண்களை அழைப்பதற்கும், பசுக்களை அழைப்பதற்கும் இது ஒன்றே கருவியாக உள்ளது. ஆனால் குழலை ஊதுதல் என்பது பசுக்களை மேய்க்கும் கருவியாக இருக்குமோ என்றால், குழலை ஊதினால் பசுக்களுடைய வயிறு நிறையும். சக்ரவர்த்தித்திருமகனுக்கு வில் கைவந்தது போன்று, க்ருஷ்ணனுக்குக் குழல் கைவந்ததாக உள்ளது.

வ்யாக்யானம் - (கெண்டையித்யாதி) கர வதத்தினன்று பிராட்டி, “பர்த்தாரம் பரிஷஸ்வஜே” என்று அணைத்தாற் போலேயாயிற்று, பசு மேய்த்து வந்த ச்ரமமெல்லாம் போம்படி நப்பின்னைப்பிராட்டி முக்தமான அழகிய கண்ணாலே குளிர நோக்கி அழகிய திருக்குழலில் பரிமளத்தாலே திருமேனியை வாஸிதமாக்கித் தன் தோளோடே யணைத்ததுவும். (கெண்டையொண்கண்) கெண்டைபோலே அதிமுக்தமாய் அம்ருதத்தை வர்ஷித்தாற்போலே குளிர நோக்குகிற கண்கள். (வாசப் பூங்குழல்) "வாசஞ் செய் பூங்குழலி"ற்காட்டிலும் பொலிவையுடைத்தான தன்னேற்றமுடைய குழலையுடையவள். (பின்னை தோள்கள் மணந்ததும்) அவளுடைய தோள்களுட னே கலந்ததுவும். மணத்தல் - கலத்தல். “தோளி” என்கிறபடியே இவளுக்கு அழகு கைவிஞ்சியிருக்குமே. (மற்றும் பல) மற்றைப் பிராட்டிமாரோடு கலந்தபடி. சக்ரவர்த்தித்திருமகனுக்கு அத்யயநம், ஆசார்ய

ஸேவை, அஸ்த்ர சஸ்த்ராப்யாஸங்களுண்டாமாபோலே, இவனுக்கு எல்லாமிவையேயிறே.

விளக்கம் – (கெண்டை இத்யாதி) - இராமன், கரன் என்பவனை வதைத்த அன்று ஆரண்ய காண்டம் (30-39) - பர்த்தாரம் பரிஷஸ்வஜே – சீதை தனது கணவனை அணைத்துக் கொண்டாள் - என்று அணைத்துக் கொண்டது போன்று, பசு மேய்த்ததால் வந்த களைப்பு அனைத்தும் நீங்கும்படியாக, நப்பின்னை பிராட்டியானவள் தனது அழகான திருக்கண்கள் கொண்டு குளிர நோக்கி, அழகான தலைமுடியின் பரிமளத்தால் திருமேனியை வாசனை மிக்கதாக ஆக்கி, தன் தோளுடன் அணைத்துக் கொண்டது நிலை உள்ளது. (கெண்டை ஒண் கண்) - கெண்டை மீன் போன்று, இளமை மிக்கதால், அமிர்தம் பெய்தது போன்று குளிர நோக்கும் திருக்கண்கள். (வாசப் பூங்குழல்) – திருவாய்மொழி (10-10-2) - வாசம் செய் பூங்குழலாள் – என்பதற்கு ஏற்ப பொலிவு நிறைந்த தன்னேற்றம் மிகுந்த தலைமுடி கொண்டவள். (பின்னை தோள்கள் மணந்ததும்) - அவனுடைய தோள்களில் கலந்ததுவும். மணத்தல் என்றால் கலத்தல். திருவாய்மொழி (4-2-5) – தோளி - என்பதற்கு ஏற்ப அழகானது மிகுதியாக இருக்கும். (மற்றும் பல) - நப்பின்னை பிராட்டியுடன் கலந்தது போன்று மற்றும் பல பிராட்டிமார்களுடன் கலந்தபடி. இராமனுக்கு அத்யயனம், ஆசார்ய கைங்கர்யம், அஸ்த்ர சஸ்த்ர பயிற்சிகள் போன்ற பலவும் உண்டானது போன்று, இவனுக்கு இவ்விதம் கலத்தலே அனைத்துமாக உள்ளது.

வ்யாக்யானம் - (மாயக்கோலப்பிரான்) நப்பின்னைப்பிராட்டியோடு கலந்த ஒற்றுமஞ்சளுந்தானுமான அத்யாச்சர்யமான ஒப்பனையுடைய வுபகாரகன். (மாயக்கோலப்பிரான்) நப்பின்னைப்பிராட்டியோடு கலந்தாற்போலே, அல்லாத பிராட்டிமார் "கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்தொரு நாள், தங்குமேலென்னாவி தங்கும்" என்றிருக்குமவர்களுடைய திருமுலைத் தடத்தில் குங்குமக் குழம்பும் கோயிற்சாந்துமாய் நின்ற அழகைச் சொல்லவுமாம். (தன் செய்கை நினைந்து மனங் குழைந்து நேயத்தோடு கழிந்தபோது) அவன் செயல்களை நினைத்தவாறே நெஞ்சு தன்வசமின்றியழியும்படி. "நினைதொறும் – நெஞ்சிடிந்துகும்" என்றிறேயிருப்பது. (நேயத்தோடு கழிந்தபோது) – ஸ்மர்த்தவ்ய விஷயரஸ்யதையாவே ஸ்மரணந்தான் இனிதாய்க் கழிந்தபோது. நேயம் - நேசம். (எனக்கெவ்வுலகம் நிகரே) ஒரு தேச விசேஷத்தில்தான் எனக்கு எதிருண்டோ ? அநுபவ வேளைபோலே ஸ்ம்ருதி வேளையிலும் இனிமையோடே

செல்லக்கடவதானால் எனக்கு எங்கே எதிர்? ஆகாசவாயர் எனக்கு எதிரோ! வாய் - இடம். பரமாகாசமென்கிற பரமபதமாகிற இடத்திலுள்ளார்தான் எனக்கு ஒப்பாரோ!! உலகமென்பது உயர்ந்தோராகையாலே, ஸூரிகளென்றபடி.

விளக்கம் – (மாயக்கோலப்பிரான்) - நப்பின்னைப் பிராட்டியுடன் கலந்ததால் வந்த மஞ்சள் பூச்சும் தானுமாக நின்ற, மிகவும் வியக்க வைக்கும் ஒப்பனை கொண்ட உபகாரகன். (மாயக்கோலப்பிரான்) - நப்பின்னை பிராட்டியுடன் கலந்தது போன்று மற்ற பிராட்டிமார்களாகிய நாச்சியார் திருமொழி (8-7) - கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்தொரு நாள், தங்குமேலென்னாவி தங்கும் - என்பதாக உள்ளவர்களுடைய ஸ்தனங்களில், குங்குமச்சாந்தும் கோயிற்சாந்துமாக நின்ற அழகைக் கூறினார் எனலாம். (தன் செய்கை நினைந்து மனங் குழைந்து நேயத்தோடு கழிந்தபோது) - அவனுடைய செயல்களை எண்ணியவுடன் நெஞ்சமானது தன்வசப்படாமல் அவனிடம் சென்று அழிந்தபடி உள்ளது. திருவாய்மொழி (9-6-2) - நினைதொறும் நெஞ்சிடிந்துகும் – என்று அல்லவோ உள்ளது? (நேயத்தோடு கழிந்தபோது) – நேயம் என்பது ஸ்நேஹம் என்பதாக, இனிமையை இலக்காகக் கொண்டது. ஆனால் அனுபவத்தால் மட்டுமே ஏற்படக் கூடிய பிரிதியானது, வெறும் நினைவுகளால் மட்டுமே ஏற்படுமோ என்பதற்கு விடை அளிக்கிறார்; இவ்விதம் எண்ணப்படும் வஸ்துவின் இனிமை காரணமாக, நினைவுகளே இனிமையாகக் கழிந்தபடி உள்ளன. (எனக்கு எவ்வுலகம் நிகரே) - பரமபதத்தில் கூட இப்படிப்பட்ட அனுபவ விஷயத்தில் எனக்கு நிகரானவர்கள் உள்ளனரா? ஆனால் எப்போதும் அவனை அனுபவித்தபடி உள்ள நித்யஸூரிகளைக் காட்டிலும் இவருக்கு ஏற்றம் என்ன என்பதற்கு விடை அளிக்கிறார்; அனுபவ நேரம் மட்டுமே அல்லாமல், நினைத்தபடி உள்ள நேரத்திலும் கூட இனிமையுடன் பொழுது போகும் என்பதால் எனக்கு நிகர் இல்லை. ஆகாயத்தை நோக்கி வாயைத் திறந்தபடி உள்ள தரித்திரர்கள் எனக்கு ஒப்பாக ஆவார்களா? அதாவது பரமாகாசம் என்று கூறப்படும் பரமபதத்தில் உள்ளவர்களும் எனக்கு ஒப்பாக இருப்பார்களோ? இந்த லோகத்தில் உள்ளவர்களைக் காட்டிலும் உயர்ந்த நித்யஸூரிகள்.

6-3-7. நிகர் இல் மல்லரைச் செற்றதும் நிரை மேய்த்ததும் நீள் நெடும் கைச்

சிகர மா களிறு அட்டதும் இவை போல்வனவும் பிறவும்
புகர் கொள் சோதிப் பிரான் தன் செய்கை நினைந்து புலம்பி என்றும்
நுகர வைகல் வைகப் பெற்றேன் எனக்கு என் இனி நோவதுவே

பொருள் - மிடுக்கிற்கு நிகரில்லாத மல்லர்களைக் கொன்றதும்; தனது விரோதிகள் தன்னை "எளியன்" என்று எண்ணும்படியாக பசுவின் பின்னே கோல் ஒன்றை எடுத்துச் சென்று மேய்த்ததும்; நீண்ட நெடிய துதிக்கை கொண்டதும், பர்வதத்தின் சிகரம் போன்று பெரியதாகவும் உள்ள குவலயாபீடம் என்ற யானையை அழித்ததும்; இப்படியாக அனுபவிக்கத்தக்க மேலும் பலவற்றைக் கொண்டதும் ஆகிய மிகுந்த ஒளி பொருந்திய தேஜஸ் ரூபனாகிய க்ருஷ்ணனுடைய லீலைகலை எண்ணி, வாய் விட்டுப் புலம்பி, அவனை அன்றாடம் வணங்கும்படியாக எனது பொழுதுகள் செல்லும்படியாக நான் உள்ளேன். நான் இனி ஏன் வருந்தவேண்டும்?

அவதாரிகை – க்ருஷ்ண சேஷ்டிதங்களையே அநுபவித்துக் கொண்டு காலம் போக்கப்பெற்ற எனக்கு "இன்னது பெற்றிலேன்" என்று நோவவேண்டுவதில்லை யென்கிறார்.

விளக்கம் – க்ருஷ்ணனுடைய லீலைகளை மட்டுமே அனுபவித்தபடி காலத்தைப் போக்கும் எனக்கு, "இவற்றை இன்னமும் நான் அடையவில்லை" என்று வருந்தத்தக்க விஷயங்கள் ஏதும் இல்லை என்கிறார்.

வ்யாக்யானம் - (நிகரில் மல்லரைச் செற்றதும்) மிடுக்குக்கு ஸத்ருசமின்றிக்கேயிருக்கும் மல்லரைச் செற்றதும். கவ்ய ஸேவையாலே ம்ருது ஸ்வபாவராயிருப்பார் இரண்டு பிள்ளைகளிறே, அபக்ஷ்ய பக்ஷணங்களாலும் சஸ்த்ராஸ்த்ர சிக்ஷைகளாலும் மலைபோலே திண்ணிதான தோளையுடைய மல்லரைப் பொடிபடுத்தினார்கள்; புழுக் குறித்தது எழுத்தானாற்போலே இங்ஙனே வாய்த்துக் கொண்டு நிற்கக் கண்டதித்தனை; இல்லையாகில் சில முக்தருடைய வ்யாபாரமாக மாட்டாதிறே. "ந ஸமம் யுத்தமித்யாஹு:" என்று கொண்டு ஸர்வரும் அஞ்சும்படியிறே அற்றைச் செயல்.

விளக்கம் – (நிகர் இல் மல்லரைச் செற்றதும்) – "நிகரில்" என்பதன் மூலம் இந்த மல்லர்களை வென்றது ஆச்சர்யம் என்கிறார். மிடுக்கிற்குத் தங்களுக்கு சமமாக

யாரும் இல்லாத மல்லர்களை விழ்த்தியதும். இவர்களைக் கொன்றது வியப்பு என்று ஏன் கூறினார்? பால் மணம் மாறாததால் மென்மையான இயல்பு கொண்ட இரண்டு பிள்ளைகள் என்பதால் ஆகும். மாமிசங்களை உண்பதாலும், சாஸ்த்ர அஸ்த்ரங்களை நன்கு கற்றதாலும், மலை போன்று உறுதியான தோள்களைக் கொண்ட மல்லர்களைப் பொடியாக்கினார்கள். இவர்கள் இப்படிப்பட்ட பாலர்கள் என்றால், அந்த மல்லர்களைப் பொடியாக்கியது எப்படி என்பதற்கு விடை அளிக்கிறார்; புழு ஒன்று தரையில் செல்வதால் ஏற்பட்ட அடையாளங்கள் எழுத்து போன்று உள்ளது; இதனைப் போன்று இப்படியும் சில லீலைகள்! “இவர்கள் கொன்றார்கள்” என்று கூறாமல், “வாய்த்துக் கொண்டு நிற்கக் கண்டது இத்தனை” என்று ஏன் கூறினார்? காரணம், இல்லையென்றால் இவர்களைப் போன்ற இளைஞர்களுடைய செயலாக ஏற்கமாட்டனர் என்பதால் ஆகும். யுத்தகாண்டம் (103-6) – ந ஸமம் யுத்தமித்யாஹு: - பொருந்தம் இல்லாத யுத்தம் – என்று கூறுவது போன்று, அனைவரும் அச்சம் கொள்ளும்படி அமைந்த செயல்.

வ்யாக்யானம் – “ஏவிற்றுச் செய்வானேன்றெதிர்ந்து வந்த மல்லரை” ஸ்வதந்த்ரராய் வந்து மேல்விழிலிறே “முடியாது” என்று கைவாங்கலாவது? கம்ஸனுக்குப் பரதந்த்ரராய் வருகையாலே இங்குத் தோற்றார்களாகில் அவன் அங்கே தோள்களைக் கழிக்குமாயிற்று; ஆன பின்பு, “கோழைகளாய்க் கொலையுண்பதில் புகழோடே முடியவமையும்” என்று மேலிட்டார்கள். “சாவத்தகர்த்த சாந்தணி தோள் சதுரன்” கூனி சாத்திவிட்ட சாந்து குறியழியாமேகாணும் அவர்களோடு வ்யாபரித்தது. மல்லரோடே கூட ஸர்வாவயங்களும் பொருந்தி வ்யாபரியா நிற்கச்செய்தே, சாத்தின சாந்து குறியழிந்ததில்லை காணும். கூனி சாத்தி விட்ட அநந்தரத்திலே பெண்கள் கண்ணாலே இலச்சினையிட்டு விடுகையினாலே இவனாலழிக்கவும் போகாதிறே. இவர்கள் கண்ணாலே இலச்சினையிடுகையாவது அவன் தோளிலே சேலும் கயலுமிடுகையிறே. இவன் மல்லரோடே அழித்தானாகிலும், “மற்றெங்கேனும் அழித்தான்” என்றிறே அவர்கள் இருப்பது. இது அழித்துப் போனானாகில், பின்பு பெண்கள் கோஷ்ட்டிக்கு ஆளாகானே. என்று எதிர்ந்து வருகையாவது - பொரக்கடவோமென்று நெஞ்சிலே துணிந்து வருகை.

விளக்கம் – கம்சன் ஏவியதால் அந்த மல்லர்கள் வந்ததாலும், அவர்களை வீழ்த்துதல் என்பது யாராலும் செய்ய இயலாத செயல் என்பதாலும், இதனை எடுத்துக் கூறி, ப்ரமாணம் காண்பிக்கிறார்; பெரியாழ்வார் திருமொழி (4-2-6) –

ஏவிற்றுச் செய்வானேன்றெதிர்ந்து வந்த மல்லரை - அதாவது அந்த மல்லர்கள் தாங்களாகவே க்ருஷ்ணனுடன் மல்யுத்தம் செய்வதைத் தீர்மானித்து வந்திருந்தால், க்ருஷ்ணனுடன் மல்யுத்தம் செய்து வெல்ல இயலாது என்று பின்வாங்கியிருப்பார்கள்; ஆனால் அவர்கள் கம்சன் வசப்பட்டு வந்தவர்கள் என்பதால், இங்கு தோற்று அவனிடம் சென்றால், அவன் இவர்களுடைய தோள்களை வெட்டுவது உறுதியே ஆகும்; ஆகவே "கோழையாக நின்று கொலை செய்யப்படுவதைக் காட்டிலும் க்ருஷ்ணனுடன் மோதிய புகழுடன் முடிதலே சரியானது" என்று எண்ணி மேலே வந்தனர். பெரியாழ்வார் திருமொழி (4-2-6) - சாவத்தகர்த்த சாந்தணி தோள் சதுரன் – அதாவது, மதுராவில் உள்ள கூனி ஒருவள் தன் மீது பூசிய சாந்து அழியாதபடி அந்த மல்லர்களுடன் யுத்தம் செய்தான். ஆனால் மல்லர்களுடன் மேலோட்டமாக மல்யுத்தம் செய்திருந்தாலும் சாந்து அழியாது அல்லவோ என்பதற்கு விடை அளிக்கிறார்; அந்த மல்லர்களுடன் தனது அனைத்து அவயவங்களும் நன்றாகப் பொருந்தும்விதமாக யுத்தம் செய்தபோதிலும், பூசப்பட்ட சாந்து அழியவில்லை. ஆனால் சாந்து குறி அத்தனை வலிமையாக உள்ளதோ என்றால், கூனி பூசிய பின்னர், பெண்கள் தங்களுடைய கண்களால் அதன் மீது மேலும் இலச்சினை இட்டதால், இவனால் கூட அவற்றை அழிக்க இயலாது அல்லவோ? இவர்கள் தங்கள் கண்களால் அடையாளம் இடுதல் என்றால், அவனுடைய திருத்தோள்களில் மீன் போன்ற தங்கள் பார்வை கொண்டு, அத்தகைய அடையாளங்கள் இட்டனர் என்று கருத்து. மல் யுத்தத்தில் இந்தச் சாந்து அழிந்தால் இவர்கள் செய்வது என்ன?மல்லர்களுடன் சேர்ந்து யுத்தம் செய்த காரணத்தால் அந்தச் சாந்து அடையாளங்கள் அழிந்தால் கூட, இந்தப் பெண்கள், "இவன் வேறு பெண்களுடன் சேர்ந்த காரணத்தால்தான் அழிந்தன", என்று இருப்பர். இவன் இவற்றை அழித்துச் சென்றால், அந்தப் பெண்களுடைய கூட்டத்தில் மீண்டும் சேர இயலாதபடி இருப்பான். "ஏன்று எதிர்த்து வருதல்" என்றால், யுத்தம் செய்வோம் என்று உள்ளத்தில் துணிவுடன் வருதல் ஆகும்.

வ்யாக்யானம் - (நிரை மேய்த்ததும்) முதற்பிறவிக்கு ஈடாகச் செய்த செயலும், இரண்டாம் பிறவிக்கு ஈடாகச் செய்த செயலும்; க்ஷத்ரிய ஜந்மத்துக்கு ஈடாம்படி மல்லரோடே யுத்தம் பண்ணினான்; கோப ஜந்மத்துக்கு ஸத்ருசமாம்படி பசுக்களை மேய்த்தான். பசு மேய்த்தபோதை ஆயாஸமாகாதே, மல்லரோடு பொருதபோதுமுள்ளது.

விளக்கம் – (நிரை மேய்த்ததும்) - முதல் பிறவிக்கு ஈடாகச் செய்த செயலும், இரண்டாவது பிறவிக்கு ஈடாகச் செய்த செயலும். அதாவது, முதல் பிறவி என்பது அரண்மனையில் தேவகி புத்திரனாக க்ஷத்ரியனாக அவதரித்தான், அந்தப் பிறவிக்கு ஏற்ற தர்மத்தின்படி மல்யுத்தர்களுடன் யுத்தம் செய்தான். இரண்டாவது பிறவி என்பது, யசோதையின் புத்திரனாக, ஆயர்குலத்தில் இடையனாக நின்றதால், அந்தப் பிறவிக்கு ஏற்ப பசுக் கூட்டங்களை மேய்தான். பசுக்களை மேய்த்தபோது எவ்விதம் எந்தவிதமான களைப்பும் இன்றி எளிதாக மேய்த்தானோ அதனைப் போன்றே மல்லர்களுடன் யுத்தம் செய்த நேரத்திலும் இருந்தான்.

வ்யாக்யானம் - (நீள் நெடுங்கைச் சிகரமாகளிறட்டதும்) மல்லர்க்குத் தப்பிலும் தப்பவொண்ணாதுகிடீர் இதுக்கு. (நீள் நெடுங்கை) தூரப் போய்த் தப்பவொண்ணாதபடி கையாலே வளைத்துக் கொள்ளவற்றாயிருக்கை. “நெடுங்கை” என்னாநிற்கச்செய்தே, “நீள் நெடுங்கை” என்கிறதிறே இதின் பெருமையிருக்கிறபடி! (சிகரமாகளிறட்டதும்) ஒரு கை வேணுமோ? இது தன்னைக் காணவமையாதோ? “ஆனை மாமலை” என்னக் கடவதிறே. பர்வத சிகரம் போலேயாயிற்றுப் பெருத்திருக்கிறபடி. (அட்டதும்) முடித்ததும். (இவை போல்வனவும் பிறவும்) இவை தொடக்கமான கேசி நிரஸநாதிகளும். (புகர் கொள் சோதி) குவலயாபீட நிரஸநத்துக்கு அநந்தரம் வடிவிற் பிறந்த ஒளி பெற்ற தேஜஸ்ஸு. (பிரான்) உபகார சீலன். “ஸக்க்ய: பச்யத” என்னும்படியிருக்குமிறே. “ஸ்வேதாம்புகணிகாசிதம்” ஆனையோடே பொருதாலும் இங்ஙனயோ வேர்ப்பது? முலையாகிற மலையோடு பொருதத்தோடு ஆனையாகிற மலையோடு பொருதத்தோடு வாசியில்லை காணும் இவனுக்கு.

விளக்கம் – (நீள் நெடுங்கைச் சிகரமாகளிறட்டதும்) - மல்லர்களிடமிருந்து தப்பினாலும் இதனிடமிருந்து தப்ப இயலாது. (நீள் நெடுங்கை) – தூரச் சென்று தப்ப முயன்றாலும் தப்பிக்க இயலாதபடி துதிக்கையால் வளைத்துப் பிடிப்பதற்கு ஏற்றபடி இருந்தல். “நெடுங்கை” என்று கூறாமல் “நீள் நெடுங்கை” என்று கூறலாம்படி இதன் பெருமை உள்ளது. (சிகரமாகளிறட்டதும்) - இதனைக் கண்டு அஞ்சுவதற்கும், பெருமையாக நோக்குவதற்கும் இதன் துதிக்கை வேண்டுமோ? இதனைக் காண்பதே போதுமானதாகும். திருவாய்மொழி (8-4-1) – ஆனை மாமலை - என்பதாக உள்ளது. மலையின் சிகரம் போன்று பெருத்ததாக உள்ளது. (அட்டதும்) - இத்தகைய யானையை முடித்ததும். (இவை போல்வனவும் பிறவும்) -

இந்த மல்லர்கள், குவயலாபீடம் தொடக்கமாக உள்ள கேசி போன்ற வதங்கள். (புகர் கொள் சோதி) – குவலயாபீடத்தை வீழ்த்திய பின்னர் வடிவில் பிறந்த ஒளி வீசும் தேஜஸ். (பிரான்) - உபகாரகன். யாருக்கு உபகாரம் செய்தான் என்றால் மதுராவில் இருந்த பெண்களுக்கு ஆகும்; இந்த உபகாரம் காரணமாக அவர்கள் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டதற்கு ப்ரமாணம் ஸ்ரீவிபு (5-20-54) – ஸக்ய: பச்யத - தோழிகளே பாருங்கள் – என்பதாகும். எதனைக் காணும்படிக் கூறுகிறார்கள் என்றால் ஸ்ரீவிபு (5-20-54) - ஸ்வேதாம்புகணிகாசிதம் - வியர்வை நிறைந்த க்ருஷ்ணனுடைய திருமுகம் – என்பதாகும். யானையுடன் யுத்தம் செய்தாலும், இந்த அளவு வியர்க்குமோ என்று வியக்கிறார்கள். அதாவது தங்களுடன் சேரும்போது, தங்களுடைய ஸ்தனங்களில் சேர்ந்ததைக் காட்டிலும் வியர்க்குமா என்று வியந்தனர். இவர்களுடைய ஸ்தனங்கள் என்ற மலைகளுடன் சேர்தல் மற்றும் யானை என்ற மலையுடன் சேர்தல் ஆகிய இரண்டிற்கும் இடையே இவனுக்கு எந்த வேறுபாடும் இல்லை.

வ்யாக்யானம் - (தன் செய்கை நினைந்து புலம்பி) உபகார சீலனானவனுடைய சேஷ்டிதங்களை அநுஸந்தித்து, அது உள்ளடங்காமை புலம்பி. (என்றும் நுகர வைகல் வைகப் பெற்றேன்) நாடோறும் புஜித்துக் கொண்டு, வைகலானது வைகப் பெற்றேன்; காலமானது கழியப் பெற்றேன். வைகலென்பது - காலம். வைகுகையாவது - கழிகை. அன்றிக்கே,அநுபவிக்கைக்குப் போரும்படி காலமானது நெடுகப் பெற்றே னென்றுமாம். அப்போது, வைகுகையாவது - நெடுகுகை. (எனக்கென் இனி நோவதுவே) “காலம் நெடுகுவது குறுகுவதாகாத இடந்தேடி யநுபவிக்கப் பெற்றிலேன்” என்கிற அத்ருப்தி யுண்டோ எனக்கென்கிறார். (எனக்கென் இனி நோவதுவே) அவனுக்கு வரும் நோவிறே, இவர்க்கு நோவாவது; அது கழியப் பெற்றதிறே. இவர் நோவு போக்கும் அவனுக்கு வரும் நோவிறே, இவர்க்கு நோவாவது: அது போகவே இவர்க்கு நோவு போயிற்றதாமிறே. உயிருக்கு வரும் நோவு உடம்புக்கு நோவாயிறே.

விளக்கம் - (தன் செய்கை நினைந்து புலம்பி) - உபகாரங்கள் நிறைந்த அவனுடைய லீலைகளை எப்போதும் எண்ணி, அந்த எண்ணங்கள் உள்ளத்தில் அடங்காமல் உள்ளதால் புலம்பி. (என்றும் நுகர வைகல் வைகப் பெற்றேன்) - அன்றாடம் அநுபவித்தபடி எனது காலத்தை நான் கழியப் பெற்றேன். அல்லது அனுபவிப்பதற்குப் போரும்படி உள்ள காலமானது, இப்போது நீண்டிருக்கும்படி

உள்ளது. (எனக்கென் இனி நோவதுவே) – “காலமானது குறுகவும் செய்யாமல் நீளவும் செய்யாமல் உள்ள இடம் தேடி அனுபவிக்கப் பெறவில்லையே” என்பதான மனக்குறை எனக்கு உள்ளதோ என்கிறார். (எனக்கென் இனி நோவதுவே) - அவனுக்கு வரும் துன்பங்கள் அல்லவோ இவருக்குத் துன்பங்கள் ஆகின்றன! அது நீங்கவில்லை. இவருடைய துன்பங்களைப் போக்கும் அவனுடைய துன்பங்கள் அல்லவோ இவருக்குத் துன்பங்களாக அமைகின்றன. அவை அகன்றால் இவருக்கும் அகன்று விடும். உயிருக்கு ஏற்படும் துன்பம், உடலுக்கு அல்லவோ?

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்